ஹபுத்தளை பிரதேச சபை
பதுளை மாவட்டம்

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹப்புதளை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்குச் சொந்தமான 34 மயானங்கள் மதிபீட்டு செய்யப்பட்டு அவற்றின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | சுரியான கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | விரைவில் தொழில்துறை மதிப்பீட்டாளரின் சேவையை பெற்றுக்கொண்டு சபை சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதி கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | ஊழியர் கடன் ஆவணத்திற்கு அமைய ரூபா 194,000 பெறுமதியான ஊழியர் கடன் நிலுவை நிதி நிலைமைகள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சுரியான கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | ஊழியர் கடன் அட்டவணையில் காணப்படும் குறைபாடுகள் திருத்தப்பட்டு நாளது வரையறுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான நிதிக் கூற்றுக்களுக்கு அமைய கைத்தொழில் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 5,733,751 மற்றும் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண மீதி ரூபா 3,793,796 ஆயினும், கைத்தொழில் கடன் கொடுத்தோர் பதிவேட்டிற்கு அமைய அம்மீதி முறையே ரூபா 8,124,915 மற்றும் ரூபா 12,054,437 ஆக இருந்தது. | பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் நாளதுவரையாக்கபட்டு இணக்கமின்மைகளுக்கு காரணங்கள் கண்டறியப்பட்டு சீராக்கப்பட வேண்டும். விற்கான சான்றுகள் கணக்குகளுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கடன்கொடுத்தோர் பதிவேடு நாளதுவரையாகாத காரணத்தினால் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மற்றும் அட்டவணையின் பிரகாரம் வேறுபாடு காணப்படுகிறது. முத்திரை கட்டணங்கள் நிதிக்கூற்றிலும் அட்டவணைகளுக்குமான வேறுபாடு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது முத்திரை கட்டண அட்டவணை கிடைக்காமையே காரணமாகும். இம்மீதிகள் நடப்பாண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிரயம் ரூபா 127,779,428 ஆன 5 சொத்து விடயங்கள் மதிப்பீட்டறிக்கை, அட்டவணைகள், மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மீதிகளை உறுதிப்படுத்தப்பட்டு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நடப்பாண்டில் சொத்துக்கள் முறையாக இனங்காணப்பட்டு மதிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் அட்டவணையிலும் முறையாக பேணிச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 126(எனை) (ஈ) ஆம் பிரிவு | பிரதேச சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் பொருத்தப்பட்டுள்ள விளம்பரப் பதாகை தொடர்பாக கணிப்பீடு மேற்கொண்டு விபரங்களை பட்டியலிட்டு கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய மற்றும் வர்த்தமானிப் பத்திரத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் பொருத்தப்பட்டுள்ள விளம்பரப் பதாகை தொடர்பாக பரிசோதனையொன்று நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30.∵.2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குரிய 3வாகனங்களுக்குரிய எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட வேண்டும். | எரிபொருள் எரிவு பரீட்சிக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,770,817 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,583,012 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,781,511 | 1,781,511 | 2,082,316 | 912,796 | 619,900 | 619,900 | 1,020,219 | 199,754 |
| (ii) | வாடகை | 6,544,540 | 6,544,540 | 5,298,007 | 587,093 | 4,571,521 | 4,571,521 | 6,454,842 | 716,157 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 640,300 | 640,300 | 904,763 | - | 540,300 | 540,300 | 794,675 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 43,506,009 | 43,506,009 | 38,257,143 | 7,565,634 | 40,133,757 | 40,133,757 | 37,188,443 | 5,735,123 |
| | மொத்தம் | 52,472,360 | 52,472,360 | 46,542,229 | 9,065,523 | 45,865,478 | 45,865,478 | 45,458,179 | 6,651,034 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 1,536,510 தொகையான வீத வரி வருமானத்தில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 796,949 தொகை சேகரிக்கப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 51 சதவீதமாகும். | அறவிடப்பட வேண்டிய வீத வரி அறவிடப்பட வேண்டும். | வீத வரி அறவீடு உடனடியாகத் திருத்தப்படும். |
| (ஆ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 907,515 தொகையான நிலுவை வீத வரி வருமானத்தில் ஆண்டினுள் ரூபா 813,027 தொகை சேகரிக்கப்படாதிருந்தது. அது வருட ஆரம்பத்தில் காணப்பட்ட மொத்த நிலுவை வீத வரியில் 89 சதவீதமாகும். | அறவிடப்பட வேண்டிய நிலுவை வீத வரி அறவிடப்பட வேண்டும். | நிலுவை வீத வரி தொடர்பான காலப் பகுப்பாய்வு ஒன்று மேற் கொண்டு வருமானத்தை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) நீதிமன்றத் தண்டப்பணம்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட | அறவிடப்பட வேண்டிய நிதியை சபை நிதியத்திற்கு உடனடியாகப் பெற்றுக் |

| | | |
|---|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,396,580 ஆகும். | வேண்டும். | கொள்வதற்கு மாகாண சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 12,054,437 ஆகும். | நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய நிதியை சபை நிதியத்திற்கு உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கு மாகாண சபைக்கு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைய செயற்படுத்த உத்தேசித்திருந்த 07 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கமைய செயலாற்ற வேண்டும் | 2018 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருந்த செயற் படுத்தப்படாத திட்டங்கள் சரியான முறையில் இனங்காணப்பட்டிருந்ததுடன், அவற்றை நடப்பு ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தப்படும். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங் கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தெளிவாக இனங் கண்டு, மீண்டும் |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | செயல்நடவடிக்கை திட்டம் திருத்தம் செய்யப்படும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்து வரும் நிர்மாணக் கடன் கொடுத்தோர் நிலுவை ரூபா 830,593 தொகை மீளாய்வாண்டிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிர்மாணக் கடன் கொடுத்தோர் ஆவணத்தில் காணப்படும் நிலுவை தொடர்பாக பரீட்சித்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் நிர்மாணக் கடன்கொடுத்தோர் ஆவணம் மற்றும் கடன் பட்டோர் ஆவணங்களை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 பதவிகளுக்குரிய 06 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணி வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும் | பதவி வெற்றிடங்கள் தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதுடன், தற்போதைய பதவியணியினரை முகாமைத்துவம் செய்வதுடன் காரியாலய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

### 3.4 பெறுகை செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக் கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட | 2019 ஆம் ஆண்டில் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| | வேண்டும். | முறையாகப் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன. |

04. <u>நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்</u>

4.1 <u>உள்ளகக் கணக்காய்வு</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ---------------------------------------- | ----------=------------- | ---------------------------=- |
| மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

4.2 <u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ---------------------------------------- | ------------------------ | ----------------------------- |
| 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ∴.2009(01) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்று காணப்படவில்லை. | சபையினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்று காணப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்று தாபித்து நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |